**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**அசல் வழக்கு எண். 110/2019**
**நாள் 16/02/2026 திங்கட்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பின் 1–வது சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டில் 54–வது பிரிவின் ஏற்ப்பாட்டின் படி சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – ராமமூர்த்தி (DW1) | த/பெயர் – கோபால் |
| வயது – | தொழில் – |
| விலாசம் – | |

**குறுக்கு விசாரணை–**

1. நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் மின்சார வாரியத்தில் போர்மேன் ஆக பணிபுரிகிறேன். வழக்கின் விவரங்கள் அனைத்தும் எனக்கு தொியும். வாதி எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் தொியும் அவர் நிலத்தில் நான் வீடுகட்டியதாக கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் உள்ள விவரங்கள் வழக்கறிஞருக்கு யார் கூறியது என்றால் நான் தான் கூறினேன். பதிலுரையில் நான் எனக்கு சொந்தமானது என கூறும் சொத்தின் சர்வே எண் 521 மத்திராவேடு கிராமம் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய பதிலுரையில் வாதிக்கு சர்வே எண் 894/2 பெரும்பேடு கிராமம் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்ணில் வாதி எவ்வளவு விஸ்தீரனத்தில் அனுபவத்தில் உள்ளார் என்றால் அதை பற்றி ஞாபகம் இல்லை.

2. வழக்கு சொத்தானது வாதிக்கு 2016 ம் ஆண்டு அவர்கள் குடும்பத்தில் ஏற்பட்ட பாகப்பிரிவினை காரணமாக பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அந்த சொத்து 1977 ம் ஆண்டு வாதியின் தந்தையால் கிரையம் பெறப்பட்ட சொத்து என்றால் அதை பற்றி ஞாபகம் இல்லை. மத்திராவேடு கிராம சர்வே எண் 521 ஆனது வாதியின் சொத்திற்கு மேற்கு பக்கம் அமைந்துள்ளதாக என்னுடைய பதிலுரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சொத்து எனக்கு எவ்வாறு பாத்தியம் என்றால் முனுசாமி என்பவரிடம் இருந்து 1996 ம் வருடம் கிரையம் பெற்றேன். மேற்படி விவரத்தை நிரூபிக்கும் வகையில் கிரைய பத்திரம் எதுவும் தாக்கல் செய்தள்ளேனா என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். மேற்படி கிரையம் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

3. நான் பதிவு செய்யப்படாத ஆவணத்தின் அடிப்படையில் சொத்தை கிரையம் பெற்றதாக கூறுகிறேன் என்றால் சரிதான். சர்வே எண் 521 க்கு பட்டா உள்ளதா என்றால் இல்லை, அது நத்தம் புறம்போக்கு நிலமாகும். மேற்படி சர்வே எண் 521 ஆனது வருவாய் ஆவணங்களில் என்ன வகை நிலமாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை காண்பிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த நிலம் வருவாய் ஆவணங்களில் என்னவகை நிலமாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் என்னுடைய பதிலுரையில் என்னுடைய நிலமும் வாதியின் நிலமும் வெவ்வேறு கிராமங்களில் உள்ள வெவ்வேறு நிலங்கள் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

4. சர்வே எண் 521 ஆனது அரசு புறம்போக்கு நிலம் என்றும் அந்த நிலத்தில் 1996 ம் வருடம் நான் குடிசை வீடு போட்டேன் என்றால்

சரிதான். நான் எந்த வருடம் மின்சார வாரிய வேலையில் சேர்ந்தேன் என்றால் 1999 ம் வருடம் சேர்ந்தேன். அரசு ஊழியர்கள் அரசு நிலத்தை ஆக்கிரமிப்பு செய்யக்கூடாது என்ற விதி உள்ளது தெரியுமா என்றால் தெரியும். நான் தாக்கல் செய்துள்ள பி.சா ஆ 1 குடும்ப அடையாள அட்டையானது அரசு புறம்போக்கு நிலத்தில் கட்டிய வீட்டின் முகவரிக்கு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா ஆ 2 வீட்டு வரி ரசீதில் கதவு எண் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

5. நான் புதிய வீடு எப்போது கட்ட தொடங்கினேன் என்றால் 2019 ம் ஆண்டு கட்ட ஆரம்பித்து 2023 ம் ஆண்டு முடிக்கப்பட்டது. மாதம் ஞாபகம் இல்லை. நான் 2018 ம் வருடம் அக்டோபர் மாதம் வீடு கட்ட தொடங்கினேன் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. நான் வீடு கட்ட துவங்கியபோது வாதி என் மீது போலிசில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அதன் அடிப்படையில் போலிசார் என்னை விசாரித்தனர் என்றால் சரிதான். என்னிடம் தற்போது காண்பிக்கப்படும் வா.சா ஆ 6 புகார் தான் அது என்றால் சரிதான். மேற்படி புகார் கொடுக்கப்பட்ட கால கட்டத்தில் வாதி வழக்கு சொத்தை அளந்து பார்த்துவிட்டு தான் கட்டிடம் கட்ட துவங்கவேண்டும் என ஆட்சேபனை தெரிவித்தார் என்றால் சரியல்ல.

6. வாதி போலிசில் கொடுத்த புகாரை நான் படித்து பார்த்தேனா என்றால் இல்லை. வாதி ஆட்சேபனை செய்த போதிலும் எதற்கு தொடர்ந்து வீடு கட்டினேன் என்றால் அவர்ஆட்சேபனை எதுவும் தொிவிக்கவில்லை. எதற்காக போலிசில் புகார் கொடுத்தார் என்றால் அவரிடத்தில் வீடுகட்டுவதாக புகார் கொடுத்தார். புகார் கொடுக்கப்பட்ட காலகட்டத்தில் அடித்தளம் மட்டும் தான் போடப்பட்டு இருந்தது என்றால்

சரிதான். அடுத்த மாதமே வாதி வழக்கு தாக்கல் செய்துவிட்டார் என்றால் சரிதான். வழக்கு நிலுவையில் இருக்கும் சமயத்தில் நான் கட்டிடத்தை கட்டி முடித்துள்ளேன் என்றால் சரிதான். நான் புதுமனை புகுவிழாவிற்கு அழைப்பிதழ் அடித்தேனா என்றால் இல்லை. எப்போது புதுவீடு குடியேறினேன் என்றால் 2023 ம் ஆண்டு சென்றேன் தேதி மாதம் ஞாபகம் இல்லை. பி.சா ஆ 2 வரி ரசீதுகளானது சர்வே எண் 521 ல் இருந்த குடிசை வீட்டிற்காக செலுத்தப்பட்ட வரி ரசீதுகள் என்றால் சரிதான்.

7. பி.சா ஆ 3 மின் கட்டன அட்டை சர்வே எண் 521 ல் இருந்த குடிசை வீட்டிற்கான இலவசமாக வழங்கப்பட்ட மின்சாரத்திற்கான அட்டை என்றால் சரிதான். பி.சா ஆ 4 ஆனது புதியதாக கட்டப்பட்ட வீட்டிற்கு 2023 ம் ஆண்டு வழங்கப்பட்ட மின் கட்டன அட்டை என்றால் சரிதான். நான் என்னுடைய பதிலுரையில் பி.சா ஆ 4 ஆனது சர்வே எண் 521 ல் கட்டப்பட்டுள்ள வீட்டிற்கு வாங்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய பதிலுரையில் ஏற்கெனவே இருந்த ஓட்டு வீட்டை இடித்து விட்டு புதிய வீடு கட்டியுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

8. நான் வழக்கு சர்வே எண்ணில் இருந்த புளியமரம் நான் ஏற்கெனவே இருந்த கூரைவீட்டின் மீது விழுந்து வீடு சேதமாகிவிட்டது என சொல்லியுள்ளேன் என்றும் அதற்கு ஆதாரமாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. புளியமரம் விழுந்ததில் ஏற்பட்ட தகராறினால் தான் வாதி பொய்யான வழக்கு தாக்கல் செய்திருப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் 01.07.2019 ம் தேதியன்று பதிலுரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பதிலுரையில் நான் வாதியின் இடத்தில் ஆக்கிரமிப்பு செய்து வீடு

கட்டியதாக வாதி கூறினார் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் 1996ம் ஆண்டில் இருந்து சர்வே எண் 521ல் அனுபத்தில் உள்ளேன் என்பதை காண்பிக்க ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல வீட்டு வரி ரசீது தாக்கல் செய்துள்ளேன்.

9. வாதியின் நிலம் விவசாய நிலம் என்றால் சரியல்ல. சிறிது தூரத்தில் தான் விவசாய நிலம் உள்ளது. எவ்வளவு விஸ்தீரணம் என்னுடைய அனுபவத்தில் உள்ளது என்பதை காண்பிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்தை நீதிமன்ற ஆணையர் வருவாய் துறை அலுவலர்களுடன் வந்து அளவை செய்தார் என்றால் சரிதான். அந்த சமயத்தில் நான் அங்கு இருந்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆணையரின் அறிக்கை குறித்த விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தற்போது ஞாபகம் இல்லை.

10. வாதிக்கு சொந்தமான சர்வே எண் 894/2 பெரும்பேடு கிராமத்தில் உள்ள சொத்து தான் அளவை செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் கட்டியுள்ள வீடானது சர்வே எண் 894/2ல் இருப்பதாக தான் நீதிமன்ற ஆணையரும், நில அளவையரும் குறித்துள்ளனர் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள வரைபடம் படி தான் சொத்து அமைந்துள்ளது என்றால் சரிதான். மேற்படி வரைபடத்தில் 8 மீட்டர் அகலம் X 13.5 மீட்டர் நீளம் என வேலிக்கு பின்புறம் காண்பிக்கப்பட்டுள்ள இடத்தில் தான் நான் வீடு கட்டியுள்ளேன் என்றால் சரிதான். அது வேலிக்கு வெளியே அமைந்துள்ளது.

11. வாதி 2017ம் வருடம் வழக்கு சொத்தில் வேலி அமைத்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல,

அதற்கு முன்னரே போடப்பட்டது ஆகும். வாதியை என் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது 3 நபர்கள் வாதியின் இடத்தில் ஆக்கிரமித்து வீடுகட்டியுள்ளதாகவும் மற்ற இருவர் மீது வழக்கு தாக்கல் செய்யவில்லை என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மற்ற இருவர் பெயர் தெரியுமா என்றால் தெரியும் விஜயன் மற்றும் செங்கன் ஆவார்கள். என் வீட்டிற்கு அடுத்து அவர்கள் வீடு அமைந்துள்ளதா என்றால் ஆமாம். நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நீ.ம.சா ஆ 1 நீதிமன்ற ஆணையரின் அறிக்கைக்கு நான் ஆட்சேபனை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

12. எனக்கு விற்பனை செய்த முனுசாமியும் நானும் வழக்கு பி அட்டவனை சொத்தில் நீண்ட காலமாக அனுபவத்தில் இருந்த காரணத்தினால் அந்த சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என பதிலுரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் சர்வே எண் 894 /2ல் எந்த காலத்திலும் அனுபவத்தில் இருந்ததில்லை என்றால் சரிதான். 2018/ 2019 வாக்கில் வழக்கு பி அட்டவனை சொத்தில் நான் அத்துமீறி ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் மத்திராவேடு கிராம சர்வே எண் 521ல் 5 செண்ட் நிலத்திற்கு உரிமையாளராக உள்ளேன் என்பதை காண்பிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் வாதி சொத்தில் ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டியுள்ளதால் தான் அவர் அந்த ஆக்கிரமிப்பை அகற்றி நிலத்தை ஒப்படைக்குமாறு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வாதி சொத்தில் நான் ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டியிருப்பது நிரூபிக்கப்பட்டால் அந்த ஆக்கிரமிப்பை அகற்றி நிலத்தை வாதிக்கு ஒப்படைக்க ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான்.

வாதி கோரி பரிகாரம் வாதிக்கு கிடைக்கதக்கது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**